## 2.144 தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தைக் கலைத்தல்

ஊரக வளர்ச்சி (இ4) துறை

அரசாணை (நிலை) எண். 229 நாள் : 30.8.2000

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 2337, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 28.8.61
2. அரசாணை (நிலை) எண். 732, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 7.9.90
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதங்கள் எண். 91508/98, ஆர்.சி.பி–2 நாள் 17.3.99, 12.7.99. 26.11.99, 24.12.99, 7.2.2000 மற்றும் 24.2.2000
4. அரசாணை (நிலை) எண்.125, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16.5.2000.
5. அரசாணை (நிலை) எண். 228, ஊரக வளர்ச்சி (பஅ4) துறை, நாள் 30.8.2000

**ஆணை**

பொதுப்பணித் துறையால் உருவாக்கப்பட்ட சமுதாய கேட்பு திட்டத்தின் (Community Listening Scheme) கீழ், 1947 முதல் 1961 வரை, 5000 சமுதாய வானொலி பெட்டிகள் நிறுவப்பட்டு, அரசால் பராமரிக்கப்பட்டு வந்தன 1961ல் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபட்சம் ஒரு சமுதாய வானொலிப் பெட்டியானது நிறுவ வேண்டும் எனும் நோக்கில், இதற்கென ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம் அமைக்க படிக்கப்பட்ட அரசாணை 1–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் சமுதாய வானொலிப் பெட்டிகள் எண்ணிக்கை சீராக உயர்ந்து, கிட்டத்தட்ட 44,000 சமுதாய வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டன. அதன் பின்னர் 5000–க்கும் மேலான சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் முதலில் நிறுவப்பட்டன. வானொலி பெட்டிகளுடன், தொலைக்காட்சிப் பெட்டிகள் பராமரிப்புப் பணியையும் மேற்கொண்டு வந்ததால், நிறுவனத்தின் பெயர் 1970ல், “தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனம்” என மாற்றியமைக்கப்பட்டது.

2. ஊராட்சி அமைப்பு மூன்றடுக்கு முறையில் உருவாக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் வலுவாக்கப்பட்ட நிலையில், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகளை இயக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைப்பு செய்து படிக்கப்பட்ட அரசாணை 4–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, கிராம ஊராட்சிகள் அவற்றிற்குரிய வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகளை வைத்திருக்கவும், பராமரிக்கவும், தற்போதைய நடைமுறையில் உள்ள வழிமுறைகளை பின்பற்றி ஊராட்சிகளுக்குள்ளேயே பழுது பார்த்துக்கொள்ளவும், அவ்வாறு பழுது பார்த்து பராமரிப்பிற்காகும் செலவினங்களை கிராம ஊராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் படிக்கப்பட்ட அரசாணை 5–ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. படிக்கப்பட்ட அரசாணை 4 மற்றும் 5–ல் வெளியிட்ட ஆணைகளைத் தொடர்ந்து, தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தை கலைத்து, இதன் மூலம் அரசு தற்போது ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தின் தலைமை அலுவலகம், வட்டார அலுவலகங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் அமைந்துள்ள இந்நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள், மதிப்புமிக்க இன்னபிற அசையா சொத்துக்கள், வாகனங்கள், வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், இவைகள் தொடர்பான உதிரி பாகங்கள் போன்ற அனைத்து அசையும் சொத்துக்கள் ஆக, அனைத்து இருப்புகளையும் சரிபார்த்து, கணக்கிடுமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். கணக்கிடப்பட்ட அசையும் சொத்துகளுக்குள்ளான வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளை, படிக்கப்பட்ட அரசாணை 5–ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையைப் பின்பற்றி, அந்தந்த கிராம ஊராட்சிகளிடம், தகுந்த ஒப்புகை பெற்று, ஒப்படைவு செய்ய இதன் மூலம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளுக்கு ஒப்படைவு செய்தது போக, எஞ்சியுள்ள இதர உதிரி பாகங்கள், மரச்சாமான்கள், எழுது பொருட்கள் இன்னபிற அசையும் சொத்துகளை நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் ஒப்பந்த புள்ளி பெற்று ஏலமிட்டு, நிர்ணயிக்கப்படலாகும் அரசு கணக்குத் தலைப்பில் இது தொடர்பாக பெறப்படும் தொகையினை ஒப்படைவு செய்ய ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இதனன்றி, நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள், இன்னபிற மதிப்பு மிக்க அசையா சொத்துகள் மற்றும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைவு செய்தது போக எஞ்சியுள்ள மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெற்று ஏலமிடப்படும் அசையும் சொத்துகள் போக எஞ்சியுள்ள, வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து இதர அசையும் சொத்துகள் பற்றிய விபரங்களை, அவைகளை எவ்வாறு உபயோகப்படுத்தலாம் எனும்ஆய்வு குறிப்புகளுடன் அரசுக்கு விரைவில் அறிக்கை அனுப்ப வேண்டுமெனவும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. கலைக்கப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு நிறுவனத்தில் பணியாற்றிவரும் அலுவலர்கள், பணியாளர்களை, வேற்றுப்பணியில் ஊதிய பாதுகாப்புடன் ஈர்த்துக்கொள்ள தனியே ஆணைகள் பிறப்பிக்கப்படும். இது குறித்து அரசாணைகள் பிறப்பிக்கப்படும் வரை, இப்பணியாளர்கள் தற்போது நடைமுறையில் உள்ளபடி அவர்களுக்குரிய ஊதியம், படிகள் மற்றும் அவர்களுக்குரிய இன்னபிற தகுதியுடைய சலுகைகளையும் பெற்றுக்கொள்ள இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது.

6. இந்த அரசாணை அ.சா.கு.எண். 64753/ஊ.வ./2000, நாள் 28.3.2000–ல் நிதித்துறையிடமிருந்து பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்